**தலைப்பு 295 - வாணிபத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 295 - வாணிபத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடங்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 திசெம்பர் 16 ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புகள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதிஏற்பாடும் செலவும்**

திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 121.90 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் வரையில் இதில் ரூபா 108.14 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தேறிய ஏற்பாட்டிலான சேமிப்பு ரூபா 13.76 மில்லியன் அல்லது 11.29 சதவீதமாகக் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 105.65 | 96.00 | 9.65 | 9.13 |
| மூலதன | 16.25 | 12.14 | 4.11 | 25.29 |
| **மொத்தம்** | 121.90 | 108.14 | 13.76 | **11.29** |

**2.2 முற்பணக் கணக்கு**

**2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 29501 விடய இலக்கம் கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான தொகைகள் பின்வருமாறாகும்.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 5.88 | 2.23 | 2.38 | 3.61 | 20.00 | 11.98 |

**2.3 கணக்காய்வு அவதானிப்புகள்**

2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வாணிபத் திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக்கூற்று என்பன மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளது.

**3. போதியளவும் பொருண்மையானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டு முரண்**

16 செலவின விடயங்களுக்கு மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் நிதியேற்பாட்டினை பயன்படுத்திய பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 8 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையான வீச்சிலான பெறுமானமொன்றைக் கொண்டிருந்தது.

**3.2 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக்கணக்கு தொடர்பான இணைக்கக்கூற்று**

29501 விடய இலக்கம் கொண்ட அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணைக்கக்கூற்று தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட இணைக்கக்கூற்றின் பிரகாரம் வெளிநாட்டு துாதரகங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையான இருந்த மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 183,622 ஆக இருந்தது. அந்த மீதிகள் 04 வருடங்களாக முன்கொண்டுவரப்படுகின்ற போதிலும் அந்த கடன் மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) இணக்கக்கூற்றுக்களின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையாக காணப்பட்ட மற்றும் 2013 ஆம் ஆண்டின் போது ஓய்வு பெற்றுச் சென்ற வாணிப பணிப்பாளர் நாயகத்திடமிருந்து ரூபா 26,894 அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த கடன் மீதியை 2016 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த தனிப்பட்ட மீதிகளின் வகைப்படுத்தப்பட்ட பொழிப்பின் பிரகாரம் இனங்காணப்படாத கடன் மீதி ரூபா 121,426 ஆக இருந்ததுடன் அந்த மீதியை இனங்கண்டு புத்தகங்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### 3.3.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3.2 பெறுகைகள் திட்டம்

அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 (அ), (ஆ) மற்றும் (உ) இன் பிரகாரம், கொள்வனவு நிறுவனத்தால் ஆகக் குறைந்தது 03 வருடக் காலப்பகுதிக்கான உத்தேச கொள்வனவு நடவடிக்கைகள் உள்ளடக்கப்பட்டு பிரதான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு எதிர்வரும் ஆண்டிற்கான கொள்வனவு நடவடிக்கைகள் விரிவாக தயாரிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் திணைக்களத்தினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவிலலை.

### 3.3.3 உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த பணிகள் கைத்தொழில்கள் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு அலகினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த அலகினால் போதியளவான உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.4 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கையின் ஒட்டுமொத்த இறக்குதி, ஒட்டுமொத்த ஏற்றுமதி, ஒட்டுமொத்த வியாபாரம் மற்றும் வர்த்தக மீதி தொடர்பான தகவல்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| செயற்பாடு | 2015 ஆம் ஆண்டின் பெறுமதி | 2014 ஆம் ஆண்டின் பெறுமதி | முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக குறைவு | குறைவின் சதவீதம் |
|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | |
| ஏற்றுமதி | 10,212 | 11,044 | 832 | 7.53 |
| இறக்குமதி | 18,989 | 19,246 | 257 | 1.34 |
| ஒட்டுமொத்த வர்த்தகம் | 29,201 | 30,290 | 1,089 | 3.60 |
| நேர் வர்த்தக மீதி | 8,777 | 8,202 | 575 | 7.01 |

(ஆ) வெளிநாட்டு வர்த்தக பிரதிநிதித்துவம் தொடர்பில் வாணிப உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் பொழிப்பு கீழே காட்டப்பட்டுள்ளது.

| **செயற்பாடுகள்** | **2015 ஆம் ஆண்டு** | **2014 ஆம் ஆண்டு** | **முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக** | |
|---|---|---|---|---|
| | | | **மீளாய்வாண்டின் அதிகரிப்பு /(குறைவு)** | **அதிகரிப்பினதும் (குறைவினதும்) சதவீதம்** |
| | **எண்ணிக்கை** | **எண்ணிக்கை** | **எண்ணிக்கை** | |
| மேம்படுத்தல் கண்காட்சிகளுக்காக துணை நாடுகளுக்கு இலங்கையின் பங்குபற்றல் | 1,202 | 798 | 404 | 50.62 |
| மேம்படுத்தல் கண்காட்சிகளுக்காக இலங்கைக்கு துணை நாடுகளின் பங்குபற்றல் | 247 | 191 | 56 | 29.31 |
| துணை நாடுகளில் இலங்கை விசேட (தனிநாடு) விளம்பர நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | 63 | 33 | 30 | 90.90 |
| இலங்கைக்கான வெளிநாட்டு தூதுவர்களின் வருகை | 575 | 422 | 153 | 36.25 |
| துணை நாடுகளில் சுற்றுலாவில் ஈடுபட்ட தூதுவர்கள் | 888 | 883 | 5 | 0.56 |
| துணை நாடுகளுக்கான தனியார் சுற்றுலா பயணிகள் | 141 | 280 | (139) | (49.64) |
| இலங்கைக்கான பிரத்தியேக சுற்றுலா பயணிகள் | 153 | 237 | (84) | (35.44) |

மேற்படி தரவுகளின் பிரகாரம், வெளிநாட்டு வாணிப பிரதிநிதித்துவத்தின் கீழ் துணை நாடுகளுக்கான மற்றும் இலங்கைக்கான தனியார் சுற்றுலாப் பிரயாணிகள் முன்னைய ஆண்டைவிட முறையே 139 மற்றும் 84 அல்லது 50 சதவீதம் மற்றும் 35 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. அதனால் இலங்கையினுள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டினை மேம்படுத்துவதற்காக வாணிப பிரதிநிதிகளின் நேரடி தலையீட்டின் அடிப்படையில் சுற்றுலா சந்தர்ப்பங்களை அறிமுகப்படுத்துவதற்கான தேவைப்பாடு கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) திணைக்களத்தால் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை மற்றும் வலய, இருதரப்பு மற்றும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் ஏற்றுமதி செய்யப்படும் இலங்கையின் (origin) உற்பத்திகளுக்காக தோற்றுவாய் சான்றிதழ்கள்

வழங்கப்பட்டிருக்கவில்லை. 2014 ஆம் ஆண்டின் போது அவ்வாறான 120,302 சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் போது 108,664 சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது 11,658 அல்லது 10 சதவீதத்தால் சான்றிதழ்கள் குறைவடைந்திருந்தன.

(ஈ) திணைக்களத்தால் 2015 ஆம் ஆண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பணிகளையும் நிறைவேற்றுவதிலான செயன்முன்னேற்றம் திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(உ) வெளிநாட்டு வாணிப பிரதிநிதித்துவத்தின் கீழ் வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலாத் துறையின் மேம்படுத்தல் தொடர்பில் கவனம் செலுத்தி வெளிநாடுகளில் தாபிக்கப்பட்டுள்ள இலங்கைக்கான 25 தூதரகங்களில் திணைக்களத்தின் 27 உத்தியோகத்தர்களைக் கொண்ட வாணிப பிரதிநிதித்துவமொன்று இடம்பெற்றிருந்தது. ஒவ்வொரு தூதரகங்களினதும் வாணிப உத்தியோகத்தர்களால் நிறைவேற்றப்பட்ட வணிக செயற்பாடுகள் தொடர்பான செயன்முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்யக்கூடிய வகையில் செயலாற்றல் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | பதவியணியின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 65 | 51 | 14 |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 02 | 0 |
| (iii) | இரண்டாம் நிலை | 62 | 44 | 18 |
| (iv) | ஆரம்ப நிலை | 19 | 17 | 2 |
| | **மொத்தம்** | **148** | **114** | **34** |